DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -11

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. செல்வராணி | Caste: | |
| Husbands Name: | திரு. ரங்கநாதன் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |
| Date | : | | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 8th day of June - 2023.

A1 and A3 to A6 Present.

**08.06.2023.**

**முதல் விசாரணை**

நான் சேலம் அரியானூரில், ஹரி ஹோட்டல் காம்லெக்ஸ்இல் மாடியில் குடியிருந்து வருகிறேன். நான் செந்தில்மெடிக்கல்ஸ் என்ற பெயரில் அரியானூர் பேருந்து நிறுத்தத்தின் அருகில் கடை நடத்தி வருகிறேன். இறந்துபோன விஜயனை தெரியும். அவர் எனது கடைக்கு மாத்திரை வாங்குவதற்காக வருவார். 01.09.2014 அன்று விஜயன் எனது கடைக்கு இரவு 8 முதல் 8.30 மணிக்குள்ளாக வந்தார்.

மாத்திரை வா'ங்கி கொண்டுவிட்டு வியாபாரம் எப்படி போய்கொண்டு இருக்கிறது என்று பேசிவிட்டு புறப்பட்டுவிட்டார். அதற்கு மறுநாள் விஜயன் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். வேறு எதுவும் தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆய்வாளர் என்னை விசாரித்த போது 01.09.2014 அன்று விஜயன் எனது கடைக்கு பக்கத்திலுள்ள ராஜகணபதி உணவகத்தில் பேசிக்கொண்டிருந்தார். அதற்கு பிறகு தான் எனது கடைக்கு வந்து மாத்திரை வாங்கி சென்றார். ஆஜர் எதிரிகளை தெரியாது. போலிசர் விசாரணையில் இறந்துபோன விஜயன் என்னிடம் பேசிவிட்டு சென்றபோது ஆஜர் 1ஆம் எதிரியும், அவருடன் 2,3 பேர்களும் ஹோட்டலுக்கு முன்பு வந்து விஜயன் ஹோட்டலில் நின்று பேசிக்கொண்டிருப்பதை பார்த்துக்கொண்டே சென்றதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த கொலை வழக்கு சம்மந்தமாக கொலை நடந்து 2–1/2 மாதங்களுக்கு பிறகு 1ஆம் எதிரியும் அவரது கூட்டாளிகளும் நீதிமன்றத்தில் சரணடைந்ததாக நான் கேள்விபட்டேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 1ஆம் எதிரி உள்ளூரை சேர்ந்தவர் என்பதாலும், அவர் எங்களது பகுதியில் பிரபலமானவர் என்பதாலும், அவரை எனக்கு தெரியும் என்றாலும், எனவே அவருக்கு பயந்துகொண்டு உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்படுகிறது.</u>

Sd/- **G. Sri Rama Jeyam,**

III Additional District Judge,
Salem.